# வாழ்விக்கும் வைணவம்

ஸ்ரீவைஷ்ணவச் சுடராழி **D.A.ஜோசப்**, பாண்டிச்சேரி
18, 4th Cross (Upstairs) Rainbow Nagar, Pondicherry 605 011
Phone: 0413-2210187 Cell. 9600824414
Web: www.dajoseph.com Email: deyeje@yahoo.com

இறந்த பின் ஜீவன் மேற்கொள்ளும் எமலோக பாதையில் 7–வது, 8வது மாதங்களைப் பெருமாள் முக்கியமானவை யாகக் கருடாழ்வாரிடம் குறிப்பிடுகிறார். அன்னதானத்தின் அவசியத்தை, இறந்தவர்களுக்கு உணர்த்த இந்தக் கால கட்டத்தை யமதூதர்கள் பயன்படுத்திக் கொள்கிறார்கள். இறந்தவனின் குடும்பத்தார் அவனைக் குறித்து ஒவ்வொரு மாதமும் அளிக்கும் பிண்ட தானம் அவனைப் பத்திரமாக வந்தடைந்து அவன் பசியைப் போக்கிய கதை 7–வது மாதத்தில் மாறுபடுகிறது.

அன்னதானம் செய்யாதவன் இந்த 7–வது, 8–வது மாதங்களில் முறைப்படி கொடுக்கப்படும் பிண்ட தானத்தையும் அடையாதபடி தடுக்கப்படுகிறான். நாம் அனைவரும் ஸ்ரீமத் பகவத்கீதையை நினைக்க வேண்டிய நேரம் இது. ஸ்ரீ கிருஷ்ணன் "பசிக்கும் வயிற்றில் நான் தான் வைச்வானர அக்னி வடிவில் நின்று உண்ணப்படும் உணவுகளை ஜீரணம் செய்கிறேன்," என்கிறான். புற வேள்வியில் அக்னிக்கு ஆஹுதி செய்வது போல் இந்த உணவு வேள்வியில் பசி என்ற ரூபத்திலிருக்கும் பகவானுக்கு உணவு என்ற ஆஹுதி இடுகிறோம். அது ஒரு பகவத் சமர்ப்பணம். உண்ணும் முன் "ஸர்வம் ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து" என்று நம் முன்னோர்கள் சொல்லச் சொன்னது இதற்காகத் தான். நாம் உண்டாலும், பிறரை உண்பித்தாலும் சூக்குமக் கண்ணோட்டத்தில் பார்த்தால், அது பகவத் ஆராதனைதான்! போஜனம் உண்டு முடிந்த பின் வியாஸர் தாம் விரதம் இருந்ததாக இடைப் பெண்களிடம் கூறிய கதை இந்த அர்த்தத்தில்தான் எழுதப்பட்டது.

அன்னதானம் என்பது ஆண்டவனுக்குச் செய்யப்படும் சமாராதனை. பசித்தவர்களைக் கண்டு இரங்குவது பகவானுக்குச் செய்யப்படும் பக்தி. ஒவ்வொரு வயிற்றுக்குள்ளிருந்தும் பசி என்ற நெருப்பாகத் தஹித்துக் கொண்டிருக்கும் பகவானுக்கு நாம் அளிக்கும் ஆஹுதிதான் விருந்தோம்பல். இதை எவ்வளவோ நமக்குப் பெரியவர்கள் எடுத்துச் சொல்லியும் அதைப் புறக்கணித்து, பசி தாகத்தால் துன்புறுவோரைக் கண்டு இரக்கப்படாத அரக்கர்களாக நாம் வாழும் போது தான் பகவானுடைய கோபத்துக்கு நாம் ஆளாகிறோம். தன் கோபத்தை அவன் யமகிங்கரர்கள் மூலம் இந்த 7வது, 8வது மாதங்களில் செயல்படுத்துகிறான். நமக்குப் பிண்டம் கொடுப்பதற்குப் பிள்ளைகள் இருந்தாலும் தானம் செய்யாத கருமிகளாக நாம் வாழ்ந்தால் அந்தப் பிண்டமும் நம்மை வந்து சேராது என்பதை இந்த மாதங்களில் யம கிங்கரர்கள்

உணர்த்துகிறார்கள். இப்படித் துன்பப்படும் ஜீவர்களுக்கு உதக கும்ப தானம் என்பது பரிகாரமாகச் சொல்லப்படுகிறது. இந்த நிலையில், இறந்தவனுடைய குடும்பத்தினர் பூவுலகில் அந்தணர்க்கு அன்னதானம் செய்ய வேண்டும் என்கிறார் பெருமாள்.

அதன்பின் பக்குவப்பதம், துக்கதம், நாதாக்கிராந்தம், அதப்தம், சீதாப்ரம், ஆகிய பிரதேசங்களை ஒவ்வொரு மாதமாகத் தாண்டி 12 மாதம் கடந்த பின் துன்பம் தாங்காமல் பூலோகத்தில் தனக்கு மனைவியாக, உறவினனாக, காதற் கிழத்தியாக, தோழனாக, வாழ்ந்தவர்களை நோக்கி கூக்குரலிடுவான். அதன் காரணமாக யமகிங்கரர்களால் இன்னும் அதிகம் உதைபடுவான். இப்படியாக வைவஸ்வத பட்டினம் என்ற யமபுரியை அடைவான். அது யமதர்மனுடைய ராஜதானி. அங்கே சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கும் யமனைச் சுற்றி சிரவணர்கள் என்று அழைக்கப்படும் பன்னிரு தேவர்கள் இருப்பார்கள். இவர்களுடைய வேலை என்னவென்றால் யமன் முன் வந்து நிற்கும் ஜீவனுடைய பாவ புண்ணியங்களை யமனுக்கு எடுத்துச் சொல்வது.

இந்த சிரவணர்கள் யார் என்று பெருமாள் விவரிக்கிறார். ஆதி காலத்தில், பெருமாள் பிரமனைப் படைத்து படைப்புத் தொழிலை துவக்கி விட்ட போது, பிரம்மனுடைய சிருஷ்டியால் அனைவரும் தோன்றினார்கள். யமனும் தோன்றினான். யமன் தன் தலை நகரத்திலிருந்து ஆட்சி செய்து ஜீவர்களின் பாவ புண்ணியங்களுக்கு ஏற்ப அவர்களுக்கான பலாபலன்களைக் கொடுக்க யத்தனித்த போது அவர்கள் செய்த பாவ புண்ணியங்கள் இன்னவை என்று யமனால் கண்டு பிடிக்க முடியவில்லை. எவ்வளவு முயன்றும் அவனுடைய ஞானத்தால் ஜீவர்கள் மனம் வாக்கு காயங்களால் செய்த நல்ல மற்றும் தீய செயல்களைப் புரிந்து கொள்ள முடியவில்லை. இதனால் மனம் வருந்தி யமன் பிரம்மனிடம் சென்று தன் கஷ்டத்தைச் சொன்ன போது அதைக் கேட்ட நான்முகன் ஒரு தர்ப்பைப் புல்லை எடுத்து எறிந்தான். அதிலிருந்து பன்னிருவர் தோன்றினார். அவர்கள் நீண்ட கண்களும், மிகுந்த உடல் அழகும் உடையவர்கள். அவர்கள் தம் மனக்கண்ணாலேயே ஜீவர்களின் நற்காரியங்களையும், கெட்டகாரியங்களை யும் அறிந்து கொள்ளக் கூடியவர்கள். அவர்கள் தாம் அந்தப் பன்னிரு சிரவணர்கள்.

இந்தப் பன்னிரு சிரவணர்களை ஆராதித்தால் அவர்கள் நம் பாவங்களைப் பொருட் படுத்தாமல் நாம் செய்த புண்ணியங்களை மட்டுமே யமனுக்குச் சொல்வார்களாம். அச்சிரவணரை பூஜிப்பவர்களுக்கு பாவம் செய்யும் மனமே மாறி புண்ணிய நாட்டங்கள் ஏற்படும் என்கிறார் பெருமாள். இவர்களைக் குறித்து பன்னிரு கலசங்களில் நீரும் அன்னமும் நிறைத்து அவற்றை அந்தணர்க்கு தானம் செய்தால் அதுவே இச்சிரவணரை ஆராதிக்கும் முறை. இச்சிரவணரின் தோற்றத்தைச் சொல்லும் புண்ணிய இந்தக் கதையை பக்தியோடு கேட்பவரும் படிப்பவரும் புண்ணியராவர் என்கிறார் பெருமாள். நீங்கள் அனைவரும் இப்பொழுது புண்ணியர்தாம்! (தொடரும்)